# ❁ஸ்ரீநிவாச திருக்கல்யாணம் ❁




திருமகள், ஆசிரமத்திற்குள் தவம் புரியும் சாயா லக்ஷ்மியோடு ஐக்கியமாகி, தமது இதய கமலத்தில், ஸ்ரீநிவாஸனின் ரூபத்தை நிலைநிறுத்தி, மீண்டும் தியானத்தில் அமர்ந்தாள்.

ஆனந்த நிலையத்தில் எழுந்தருளிய ஸ்ரீமந் நாராயணனுக்கு லக்ஷ்மியின் பிரிவைத் தாங்க முடியவில்லை.

முன்பு தாம் திருமகளுக்காக தியானத்தை மேற்கொண்டு படாத பாடுபட்டு அவளை வக்ஷஸ்தலத்தில் இருத்திக் கொண்டார். ஆனால், திருமகள் மீண்டும் தம்மை விட்டுப் பிரிந்து, பாதாள லோகத்தில் தவத்தை மேற்கொண்டு

விட்டாளே! எங்ஙனமாகிலும் தேவியைத் திரும்பவும் பூமண்டலத்திற்கு வரவழைக்க வேண்டும் என்று இதயக்கமலத்திலே எண்ணினார் திருமால்! கருடாழ்வார் மீது ஆரோகணித்து பாதாள லோகத்திற்கு எழுந்தருளினார் எம்பெருமான்!

தியானத்திலிருக்கும் திருமகளின் இதயகமலத்தில் திருமால் ஜோதி வடிவமாய்த் தோன்றினார்.

பகவான் பிரசன்னமாகிவிட்டார் என்று எண்ணிப் புளகாங்கிதம் அடைந்த திருமகள், கருணை விழிகளைத் திறந்து பார்த்தாள். பகவான், தேவியின் புறக்கண்களுக்குப் புலப்படாமல் அந்தர்த்தியாமியானர். திருமாலின் தரிசனம் கிடைக்காததால் திருமகள் கலக்கமுற்றாள்.

"சுவாமி! இதென்ன விளையாட்டு? என்ன காரணம் பற்றி இவ்வாறு காட்சியளித்து மறைந்து விட்டீர்கள்?"

"தேவி! சபலத்தினால் உன் தவம் விபலமாயிற்று. அதனால் தவத்தை நிறுத்திவிட்டு, எமக்குச் செய்ய வேண்டிய பணியில் ஈடுபடுவாயாக!" என்று திருமால் தேவியின் இதயத்திலிருந்து மலர்ந்தருளினார்.

தேவிக்கு பகவான் குபேரனிடம் வாங்கிய கடனைப் பற்றிய நினைவு வந்தது. பெருமாள் இட்ட ஆணையை எண்ணிப் பார்த்தாள்! திருமாலைத் தோத்திரம் செய்தாள். திருமால் பிரசன்னமானார்.

"ஸ்ரீலக்ஷ்மி! பத்மஸரோவத்திற்குச் செல்வாயாக! சுகரின் ஆசிரமத்தில், அவரது புதல்வன் சாயாசுகர் உன்னை வழிபாடுவான். அத்திருவிடத்திலேயே நீ எழுந்தருளி அனைவருக்கும் சகல சௌபாக்கியங்களையும் அளித்து அருள் புரிவாயாகுக!" என்று சொல்லி சாயாசுகரைப் பற்றிய விருத்தாந்தங்களையும் கூறினார்.

ஒருமுறை சுகமுனிவர் பூமண்டல வாழ்வை நீத்து பரமபதத்தை அடைய எண்ணியவராய் விண்ணை நோக்கி புறப்பட்டார். அங்ஙனம் புறப்பட்ட சுகமுனிவர் சூரிய மண்டலத்தைக் கடக்கப் போகும் தருணத்தில் சூரியன், சுகரை இடைமறித்து மேலே போக விடாது தடுத்தான். சுகர், ஒன்றும் தோன்றாமல் திகைத்தார்.

சூரியன், அவரைப் பார்த்து மூதாதையர்கள் அனைவரும் பூலோகத்தில் வாழ்ந்திருக்க, நீங்கள் மட்டும் எவ்வாறு சொர்க்கலோகம் செல்ல இயலும்?" என்று கேட்டான். இதனால் இருவரிடையே வாதம் வளர்ந்தது. "கிருகஸ்தாசிரமத்தை மேற்கொள்ளாதார்க்கு வானப் பிரஸ்தம் ஏது?" என்று சுகரோடு வாதம் புரிந்தான் சூரியன்.

சுகருக்கும், சூரியனுக்கும் கடுமையான வாதம் தர்க்கரீதியாக நடந்தது. சுகர் தமது சக்தியால் ஒரு செல்வனைத் தோற்றுவித்து சாயா சுகர் என்று திருநாமம் சூட்டி, சூரியனுக்குத் தமது வல்லமையை காட்டினார்.

சாயா சுகரை, முனிவர் தமது தந்தைக்குப் பணிவிடை செய்யுமாறு ஆணையிட்டு அனுப்பி வைத்தார். சுகரின் ஆற்றலைக் கண்டு அவருக்கு மேலே செல்ல அனுமதி கொடுத்தான் சூரியன். இவ்வாறு தோன்றியவர் தான் சாயாசுகர்.

சாயாசுகரைப் பற்றி மகாலட்சுமி தாயாரிடம் எடுத்துரைத்த ஸ்ரீமந் நாராயணன், தாயாருக்கு விடை கொடுத்து விட்டு மறைந்துவிட்டார். திருமாலின் அமுதமொழி கேட்டு அகமகிழ்ந்த அஷ்டலக்ஷ்மி, ஆதிசேஷனை மனதால் தியானித்தாள்.

ஆதிசேஷன், திருமகளின் திருமுன் தோன்றி, பணிவன்போடு நின்றான். "ஆதிசேஷா! நான் இப்பொழுதே

பத்மஸரோவத்திற்குச் செல்ல வேண்டும்" என்றாள் தாயார்.

தேவியின் ஆணையைச் சிரமேற்கொண்ட ஆதிசேஷன், தங்கமயமான ரதம் ஒன்றைக் கொண்டு வந்தான். தேவியை அத்தேரில் ஏற்றிக் கொண்டு பத்மஸரோவத்திற்குப் புறப்பட்டான். ரதம் புறப்பட்டதும், அமரர்கள் அலர்மேல் மங்கை மீது அமுத மலர்களைப் பொழிந்து ஆரவாரம் செய்தனர்.

பத்மஸரோவத்திற்கு வந்து சேர்ந்த அலர்மேல் மங்கை அங்கு தவமிருக்கும் சாயாசுகரைக் கண்டாள். சாயாசுகர் தேவியை, வேதஆகம விதிப்படி போற்றித் துதித்து வரவேற்று, உயர்ந்த ஆசனத்தில் எழுந்தருளச் செய்தார்.

திருமகள் பத்மஸரோவத்திற்கு எழுந்தருளியுள்ள சுபசெய்தியைக் கேள்வியுற்று, திருமால் முன்னதாகவே எழுந்தருளினார். நான்முகன் அன்னவாகனத்திலும், பரமசிவன் இடப வாகனத்திலும் ஆரோகணித்து பத்மஸரோவத்திற்கு எழுந்தருளினார்கள். மும்மூர்த்திகளையும் பார்த்த திருமகள் மட்டிலா மகிழ்ச்சி கொண்டாள்.

நான்முகன், ஆதிலக்ஷ்மியை வணங்கி, "லோகமாதா! கலியுகத்தில் பாபங்கள் புரிந்து உழலும் பூமண்டலவாசிகளைக் காத்தருள வேண்டும். இந்த பத்மஸரோவத்தின் தீரத்தில் ஓர் அழகிய ஆலயத்தை அமைத்துத் தருகிறோம். தேவி கோவில் கொள்ள வேண்டும். அலர்மேல் மங்கையாய்ப் பிராட்டியார் எழுந்தருளிய இப்புண்ணிய தீர்த்தத்தில் நீராடுபவர்கள் பிறவிப்பயனைப் பெற்று உய்யும் வரத்தினை அருளுதல் வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

நான்முகன் நவின்றது கேட்டு நாராயணன், "தேவி! பிரம்மனின் விருப்பம் நிறைவேறட்டும். ஆனால் எமது விருப்பம் சேஷாசலத்திற்கு வந்து, ஆனந்த நிலையத்தில் என்னோடு

வாசம் புரிதல் வேண்டும்" என்று திருவாய் மலர்ந்தார்.

திருமகள் சந்தோஷித்தாள். சதுர்முகன் சொன்னது போல், திருச்சுகனூரில் கோவில் கொள்ளத் திருவுள்ளம் கொண்டாள்.

அலர்மேல் மங்கை தனது விருப்பத்தை திருவாய் மலர்ந்தாள். திருமாலுக்கும், தேவியின் விருப்பத்தை பூர்த்தி செய்வதே உகந்தது என்று தோன்றியது. நான்முகனிடம் பிராட்டியார் கோவில் கட்டுமாறு கேட்டுக் கொண்டாள்.

நான்முகன் அலர்மேல் மங்கை தாயாரை இச்க்ஷேத்திரத்திலேயே தங்கியிருந்து இங்கு கோவிலில் இருந்து அருள்புரியும்படி வேண்டிக் கொண்டார். நான்முகன் நவின்றது கேட்டு நாராயணன், "தேவி! பிரம்மனின் விருப்பம் நிறைவேறட்டும். ஆனால் எமது விருப்பம் சேஷாசலத்திற்கு வந்து, ஆனந்த நிலையத்தில் என்னோடு வாசம் புரிதல் வேண்டும்" என்று திருவாய் மலர்ந்தார்.

திருமகள் சந்தோஷித்தாள். சதுர்முகன் சொன்னது போல், திருச்சுகனூரில் கோவில் கொள்ளத் திருவுள்ளம் கொண்டாள்.

அலர்மேல் மங்கை தனது விருப்பத்தை திருவாய் மலர்ந்தாள். திருமாலுக்கும், தேவியின் விருப்பத்தை பூர்த்தி செய்வதே உகந்தது என்று தோன்றியது. நான்முகனிடம் பிராட்டியார் கோவில் கட்டுமாறு கேட்டுக் கொண்டாள்.

நான்முகன் விசுவகர்மாவை வரவழைத்தார். அலர்மேல் மங்கை கோவில் கொண்டு அருள ஓர் அழகிய ஆலயத்தை அமைக்குமாறு ஆணையிட்டார். விசுவகர்மா, பயபக்தியோடு பிரமிக்கத்தக்க வண்ணம் பிரம்மாண்டமான கோவில் ஒன்றை வெகுவிரைவில் நிர்மாணித்தான். திருமாலும் - திருமகளும் விசுவகர்மாவைப் போற்றிப் புகழ்ந்து, திருவருள் புரிந்தனர்.

பஞ்சமி தினத்தன்று, நான்முகனும் - பரமசிவனும் -

தேவர்களும் - தவசியர்களும் ஒன்றுகூடி பெரியவிழா நடத்தி, அலர்மேல் மங்கையைத் திருக்கோவிலுக்குள் எழுந்தருளச் செய்தனர். ஆலயத்துள் எழுந்தருளிய அலர்மேல் மங்கையின் அணி மார்பில், தாம் அணிந்திருந்த துளசி மாலையை அணிவித்தார் திருமால்.

தேவர்கள் தண்மலர் பொழிய -தவசியர் திருநாமம் போற்ற - தேவதுந்துபிகள் முழங்க - கந்தர்வர் பண் இசைக்க - அரம்பையர் பரதம் ஆட -அகில உலகங்களும் இக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு பேரானந்தத்தில் மூழ்கின.

"மகாலக்ஷ்மி! என் உள்ளம் பேருவகை கொள்கிறது. இக்கோவிலில் எழுந்தருளியுள்ள உன்னைச் சாயாசுகர் முக்காலமும் இன்றி எக்காலமும் வேதாகம விதிப்படி வழிபடுவார். அவரது பூஜைகளை ஏற்று, உன்னைப் போற்றி வரும் பக்தர்களுக்குச் சகல சௌபாக்கியங்களையும் அருள்வாயாக! என்றார் ஸ்ரீநிவாஸன்".

திருமகள், திருமாலின் திருப்பாதங்களைப் போற்றித் துதித்து, "பிரபோ! எனக்கு ஒரு வரம் தந்தருள வேண்டும். ஆண்டுதோறும் கார்த்திகைத் திங்கள் - சுக்லபக்ஷம் - பஞ்சமி தினத்தன்று தேவரீர் ஒரு பொன் வண்ணப் பட்டுப் புடவையும், புஷ்பமாலையும் அனுப்பி அருளுதல் வேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.

திருமகளின் பிரார்த்தனையை ஏற்றருளிய ஸ்ரீநிவாஸன், சாயாசுகரைப் பார்த்து, "சுக முனிவரின் செல்வனே! சுந்தரமான இத் திருசுகனூரில் ஒரு சிற்றூரை நிர்மாணித்து, பிராட்டியாரின் அபிலாஷையைப் பூர்த்தி செய்வாயாக!" என்று ஆணையிட்டார் பரந்தாமன்.

சாயாசுகர், திருமாலையும், திருமகளையும் வணங்கி, "அனந்த கோடி பேறு பெற்றேன்; என்னை ஆட்கொண்டு அருளியதற்கு!

அனந்த நாராயணா! தேவியின் திருவடியில் தஞ்சமென்று சரணடைந்து, தேவரீர் ஆணைப்படி ஆராதித்து வருவேன்" என்று பணிவன்போடு பகர்ந்து, திருமாலையும் - திருமகளையும் பலமுறை வலம் வந்து வணக்கத்தோடு நின்றார்.

அதியற்புதமாகவும், அபூர்வமாகவும் கோடி சூரிய பிரகாசத்தோடும் மலர்ந்த அலரினை ஆசனமாகக் கொண்டு மகாலட்சுமியான ஜகன்மாதா அலர்மேல்மங்கையாகத் திருச்சானூரில் (திருச்சுகனூர்) எழுந்தருளினாள்.

🌺🍁🌻🌹🌹🌹🌹🌹🌹 முற்றும் 🍁🌺🌻🌹🌹🌹🌹🌹

ஸ்ரீநிவாச திருக்கல்யாணம் என்னும் இத்தொடரினை பதிவிடுவதற்கு அருள்புரிந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனனை தலை வணங்கி பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீநிவாச திருக்கல்யாணம் என்ற இத்தொடர் நாயகன் ஏழுமலையான் உங்கள் அனைவரின் உள்ளங்களிலும் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருப்பான் என்று எண்ணுகிறேன். ஏனெனில், உள்ளங்களைக் கவரும் கள்வன் அல்லவா அவன். ஐயனுக்கு அனந்த கோடி நமஸ்காரங்கள்🙏.

திருமலை திருப்பதியில் ஏகாந்தமாய் குடிகொண்டு, அலர்மேல் மங்கை தாயார் அருளாட்சி செய்யும் திருச்சானூரில் நித்தியகல்யாணம் கண்டு ஆனந்தமாய் அருள்புரியும் எம்பெருமானையும் - பிராட்டியாரையும் வணங்கி விடை பெறுகிறேன்.

எம்பெருமான் ஸ்ரீநிவாசன் - பத்மாவதி - அலர்மேல் மங்கை தாயாரின் பரபூரண அருட்கடாட்சம் இப்பதிவினை தொடர்ந்து படித்து வந்த அனைத்து அன்பர்களுக்கும் பரிபூரணமாகக் கிடைத்திட வேண்டுகிறேன்.

அடியேன்
#Karthigasivakumar☺

பதிவு தொகுப்பு
#Sivaganesan.